## இராசிபுரம் நகராட்சி

### நகர்மன்ற சாதாரணக் கூட்ட அறிவிப்பு

2023–ஆம் வருடம் டிசம்பர் மாதம் 29–ஆம் தேதி வெள்ளிக் கிழமை நண்பகல் 12.00 மணிக்கு இராசிபுரம் நகராட்சியின் சாதாரணக் கூட்டம் ஒன்று நகர் மன்ற கூட்ட அரங்கில் நடைபெறவுள்ளது.

அதுசமயம் கீழ்க்கண்டப் பொருள்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

இராசிபுரம் நகராட்சி
நாள் : 26.12.2023

தலைவர்,
நகர் மன்றம்.

### பொருள்கள்

(1) இராசிபுரம் நகராட்சிப் பகுதிகளில் கொசுத் தடுப்புப் பணியை தீவிரப்படுத்த வாகனத்தில் பொருத்தி புகை மருந்து அடிக்கும் இயந்திரம் ஒன்று தேவைப்படுகிறது. மேற்க்கண்ட இயந்திரத்தை வாங்கவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ. 5.50 இலட்சம் வருவாய் நிதியிலிருந்து மேற்க்கொள்ளவும் மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

(5463/23/எச்1)

**தீர்மானம் எண். 491**

அனுமதிக்கப்பட்டது

(2) இராசிபுரம் நகராட்சியின் அனைத்துப் பிரிவுகளுக்கும் தேவையான எழுதுபொருட்கள், A4 பேப்பர்கள், A5 பேப்பர்கள், தன்பதிவேடுகள், நோட்டுகள், சேவை மையத்திற்கான பதிவேடுகள், சொத்துவரி, குடிநீர் கட்டணம், தொழில்வரி இரசீதுகள் மற்றும் நகராட்சிக்குத் தேவையான பேனா, பென்சில்கள், இதரப் பொருட்கள் வாங்குவதற்காகும் உத்தேச செலவினம் ரூ. 7.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ) செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(4821/23/பி3)

**தீர்மானம் எண். 492**

அனுமதிக்கப்பட்டது

(3) இராசிபுரம் நகராட்சிக்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2022–23–ஆம் ஆண்டிற்கு மாவட்ட ஆட்சித் தலைவர், நாமக்கல் அவர்களின் செயல்முறை கடித ந.க.எண். 547/2023/அ4, நாள் 14.10.2023–இல் ரூ.5.00 இலட்ச மதிப்பீட்டில் வார்டு எண். 4–இல் கிருஷ்ணன் தெருவில் ஆழ்துளைக் கிணற்றில் புதியதாக மின் விசைப்பம்பு அமைத்து தண்ணீர் வசதி செய்தல் பணிக்கு நிருவாக அனுமதி வழங்கியுள்ளார். அதன்படி, மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி 17.11.2023–இல் கோரப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1 | Grand yard Constructions Tiruchengode | Rs. 5,00,000/– | 0.07 சதவீதம் மதிப்பீட்டைவிட குறைவு. |
| 2 | திரு செல்லப்பன் | | 0.99 சதவீதம் மதிப்பீட்டைவிட அதிகம். |

மேற்படி பணிக்கு மதிப்பீட்டைவிட குறைவான 0.07% ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள Grand yard Constructions, Tiruchengode ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

1) மதிப்பீட்டைவிட குறைவான 0.07% ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள Grand yard Constructions, Tiruchengode ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்ப;நதப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

2) திட்டப் பணியாக இருப்பதால் பணியை உடன் மேற்கொள்ள வேண்டி பணியாணை நகர் மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணியாணை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(4965/23/இ1)

தீர்மானம் எண். 493

அங்கீகரிக்கப்பட்டது

(4) இராசிபுரம் நகராட்சிக்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2022–23–ஆம் ஆண்டிற்கு மாவட்ட ஆட்சித் தலைவர், நாமக்கல் அவர்களின் செயல்முறை கடித ந.க.எண். 547/2023/அ4, நாள் 14.10.2023–இல் ரூ. 15.00 இலட்ச மதிப்பீட்டில் வார்டு எண். 15–இல் C.P. கண்ணையா தெருவில் புதியதாக நியாய விலைக் கட்டிடம் கட்டுதல் பணிக்கு நிருவாக அனுமதி வழங்கியுள்ளார். அதன்படி, மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி 17.11.2023– இல் கோரப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1 | Hindustan Power Technology, Salem | Rs. 15,00,000/– | 1.14 சதவீதம் மதிப்பீட்டைவிட அதிகம். |
| 2 | Tamil Selvi, Contractor | | 0.05 சதவீதம் மதிப்பீட்டைவிட குறைவு |

மேற்படி பணிக்கு மதிப்பீட்டைவிட குறைவான 0.05 % ஒப்பயதப்புள்ளி அளித்துள்ள Tamil Selvi ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

1) மதிப்பீட்டைவிட குறைவான 0.05% ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள Tamil Selvi ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்படி பணி திட்டப்பணியாக இருப்பதால் உடன் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணியாணை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(4966/23/இ1)

தீர்மானம் எண். 494

அங்கீகரிக்கப்பட்டது

(5) இந்நகராட்சிக்கு கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 2023–24–இன் பணிக்கு ரூ. 586.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு அரசாணை( 4டி) எண். 39, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 14.09.2023–இன்படி நகராட்சிக்குச் சொந்தமான பழைய பேருந்து நிலையத்தில் வணிக வளாகம் மற்றும் பல அடுக்கு வாகன நிறுத்துமிடம் அமைத்தல் பணிக்கு நிருவாக அனுமதி வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது. அதனைத்தொடர்ந்து மேற்படி பணி மேற்கொள்ள 31.10.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் பின்வருமாறு.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1 | M/s. G.V. Constructions,<br>72, Ponnamapudhur ,<br>pattathiyankuaati ( PO)<br>Sendamangalam ( TK)<br>Namakkal ( Dt) | Rs. 586.00 இலட்சம் | 5.55 % மதிப்பீட்டைவிட அதிகம். |
| 2 | M/s.K.S.R. Associates<br>Subland–1,<br>No. 1A41 Parmathi Road,<br>Namakkal | | 23.47 % மதிப்பீட்டைவிட அதிகம். |

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண். 2–இல் உள்ள M/s. K.S.R. Associates வ.எண். 1– இல் உள்ள M/s. G.V. Constructions ஒப்பந்ததாரைவிட குறைவாக அளித்துள்ளார். இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுமே மதிப்பீட்டைவிட அதிகமாக இருப்பதாலும் பணி மேற்கொள்ள வேண்டிய அவசியம் உள்ளதாலும் M/s. G.V. Constructions ஒப்பந்ததாரரிடம் 03.11.2023–இல் விலைப்புள்ளி குறைத்துத்தர கடிதம் மூலம் கோரப்பட்டது. ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள அனைத்துப் பணிகளுக்கும் 0.01 % மதிப்பீட்டைவிட குறைவான விலை விகிதத்தில் அனைத்து இனங்களையும் செய்து வழங்க ஒப்புக்கொள்கிறேன் என தெரிவித்து M/s. G.V.Constructions, ஒப்பந்ததாரர் 27.11.2023 அன்று கடிதம் வழங்கியுள்ளார். நிருவாக அனுமதி வழங்கப்பட்ட திட்டப் பணியை விரைந்து முடிக்க வேண்டிய அவசியம் கருதி, வ.எண். 1–இல் உள்ள ஒப்பந்ததாரரான M/s. G.V. Constructions அவர்கள் மதிப்பீட்டை விட 0.01 % குறைவான விலை விகித ஒப்பயதப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மேற்படி ஒப்பந்தப்புள்ளி முதல் அழைப்பாக இருந்தாலும் திட்டப் பணியை விரைந்து முடிக்க வேண்டிய அவசியம் கருதி M/s. G.V. Constructions ஒப்பந்ததாரர் அவர்கள் மதிப்பீட்டைவிட 0.01 % குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

(4368/23/இ1)

**தீர்மானம் எண். 495**

அனுமதிக்கப்பட்டது

(6) இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணியில் பயன்படுத்தப்பட்டு வரும் லாரி எண். TN 28 AS 0110–இன் சக்கரங்களின் பட்டைகள் தளர்ந்துள்ளதை சரிசெய்ய ஏற்படும் உத்தேச செலவினம் ரூ. 15000/–ற்கு வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

(4988/23/எச்1)

**தீர்மானம் எண். 496**

அனுமதிக்கப்பட்டது

(7) இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மைப் பணியில் பயன்படுத்தப்பட்டு வரும் லாரி எண். TN 28 AS 0110–இன் கிளட்ச் பிளேட்டுகள் பழுதடைந்துள்ளதை சரிசெய்ய ஏற்படும் உத்தேச செலவினம் ரூ. 15000/–ற்கு வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம். (4987/23/எச்1)

**தீர்மானம் எண். 497**

அனுமதிக்கப்பட்டது

( 8 ) இந்நகராட்சிக்கு எழுதுபொருட்கள், ஈரோடு மாவட்ட பெண்கள் எழுதுபொருட்கள் அச்சுக்கூட மற்றும் தையல் தொழிலாளர்கள் தொழிற்கூட்டுறவு சங்கம் லிமிடெட் தங்கள் நிறுவனம் மூலம் எழுதுபொருட்கள், கணினி உபகரணங்கள், படிவங்கள் மற்றும் புத்தகங்கள் மிக சிறந்த முறையில் தரமாக விற்பனை செய்வதால் ஆர்டர் வழுங்கக் கோரி 27.11.2023 அன்று கடிதம் எங்களுக்கு வரப்பெற்றுள்ளது.

மேற்படி நிறுவனத்தில் வறுமைக் கோட்டிற்குகீழ் வாழும் பெண்கள் விதவைகள், ஆதரவற்றோர் ஆகிய மகளீர்களை உறுப்பினர்களாக சேர்த்து வேலை வாய்ப்பு அளித்து வருவதால், இந்த சங்கத்தில் அரசுத் துறைகளும் மற்றும் அரசை சார்ந்த முறை நிறுவனங்களும் விலைப்புள்ளி கோராமல் நேரடியாக கொள்முதல் செய்ய தமிழ்நாடு அரசாணை எண். 283, நாள் 18.06.1998–இல் ஆணை பிறப்பித்துள்ளது.

இந்நகராட்சிக்கு எழுதுபொருட்கள், பதிவேடுகள், சேவை மையத்திற்குத் தேவையான படிவங்கள் மற்றும் சொத்துவரி, குடிநீர் வரி, ரசீதுகள் அரசாணை எண். 283 நாள் 18.06.1998–இன்படி மேற்படி நிறுவனமான ஈரோடு மாவட்ட பெண்கள் எழுதுபொருட்கள் அச்சுக்கூட மற்றும் தையல் தொழிலாளர்கள் தொழிற்கூட்டுறவு சங்கம் லிமிடெட் அவர்களிடமிருந்து நேரடியாக கொள்முதல் செய்யவும், பணியாணை வழங்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்படி செலவுத் தொகையை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

(4821/23/பி3)

**தீர்மானம் எண். 498**

அனுமதிக்கப்பட்டது

(9) இராசிபுரம் நகராட்சிப் பகுதிகளில் சுற்றித்திரியும் தெரு நாய்களுக்கு வெறிநோய் தடுப்பூசி செலுத்தவும், கருத்தடை அறுவை சிகிச்சை மேற்க்கொள்ளவும் ரூ. 5.00 இலட்சம் உத்தேச செலவினம் மன்ற தீர்மானம் எண். 466, நாள் 27.10.2023–இல் நிருவாக அனுமதி வழங்கியுள்ளதன்பேரில் 06.11.2023–இல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு.

1) PET CARE FOUNDATION, CHENNAI – ரூ. 1640/– (per day) குறைவு.

2) POULOSE ANIMAL RESUEE AND WELFARE TRUST, CHENNAI ரூ. 1680/– (per day) அதிகம்.

மேற்படி பணிக்கு குறைவான ரூ. 1640/– ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள PET CARE FOUNDATION, CHENNAI ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணியினைமேற்க்கொள்ள நகர் மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணியாணைவழங்கியதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள PET CARE FOUNDATION, CHENNAI ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கவும் அவசரம் அவசியம் கருதி நகர் மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர் மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணியாணை வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(4792/23/எச்1)

**தீர்மானம் எண். 499**

அனுமதிக்கப்பட்டது

( 10 ) இராசிபுரம் நகராட்சி பொது சுகாதாரம் மலேரியாப் பிரிவில் டெங்கு– மலேரியா கொசுப் புழுக்கள் உற்பத்தியை தடுக்கும் பணிகளை DBC பணியாளர்களைக்கொண்டு நகரிலுள்ள 27 வார்டுகளிலும் வீடு வீடாக தண்ணீர் தொட்டிகளுக்கு புழுக்கொல்லி மருந்து தெளிக்கப்படுகிறது. தற்போது அபேட் (Temphos) மருந்து இருப்பு குறைவாக உள்ளதால், 150 லிட்டர் அபேட் (Temphos) வாங்க அவசியம் உள்ளதால், உத்தேச செலவினம் ரூ. 1.50 இலட்சம் வருவாய் நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம். (5417/23/எச்1)

**தீர்மானம் எண். 500**

அனுமதிக்கப்பட்டது

( 11 ) இராசிபுரம் நகராட்சிப் பகுதிகளில் சேகரிக்கப்படும் திடக்கழிவுகளில் வாழை இலை, வாழை மரம், மரக்கிளைகள், தோட்டக் கழிவுகள் ஆகியவைகள் அதிகளவு சேர்ந்து வருகிறது. இந்தக் கழிவுகளை துகளாக்கி மக்க வைக்க ஏதுவாக இவைகளை அரைக்க இயந்திரம் ஒன்று தேவைப்படுகிறது. மேற்க்காணும் இயந்திரத்தை வாங்கிக் கொள்ள ஏற்படும் உத்தேச செலவினம் ரூ. 5.00 இலட்சத்திற்கு வருவாய் நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம். (5462/23/எச்1)

**தீர்மானம் எண். 501**

அனுமதிக்கப்பட்டது

( 12 ) இராசிபுரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 27, கோனேரிப்பட்டி, வார்டு – D, பிளாக் – 9, நகர புல எண். 32/8B மற்றும் 9B–இல் மனுதாரர் திரு சுந்தரம், 16, வயக்காடு, இராசிபுரம் என்பவருக்கு 1.24 ஏக்கர் பரப்புள்ள இடத்தில் 23 குடியிருப்பு மனைகள் உள்ளடக்கிய மனைப்பிரிவிற்கு உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், நாமக்கல் அவர்களின்மனைப்பிரிவு வரைபட எண். SWP/DTCP/NAMAKKAL/LAYOUT NO/272/2023

நாள் 02.08.2023–இல் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி, மனைப்பிரிவிற்கு அடிப்படை வசதிகள், சாலைகள், குடிநீர் வடிகால், மின்விளக்கு வசதிகள் அமைக்கப்பட்டுள்ளது. மனுதாரர் நகராட்சிக்கு செலுத்த வேண்டிய கட்டணம் ரூ. 53219/– சலான் எண். 053/01/1/23–24/0001956 நாள் 18.12.2023–இல் செலுத்தியுள்ளார். மேற்படி மனைப்பிரிவில் பொது ஒதுக்கீடுகள் மற்றும் மனைப்பிரிவு சாலைகள் தானபத்திர எண். 3741/2023 நாள் 01.06.2023–இன்படி சாலை பயன்பாட்டிற்காக அயிட்டம் எண். 1–இல் 1003.28 சதுர மீட்டர், அயிட்டம் எண்.2–இல் 112.41 சதுர மீட்டர், அயிட்டம் எண். 3–இல் 370.13 சதுர மீட்டர் மற்றும் மூலை மடக்கு 6.93 சதுர மீட்டரும் ஆக மொத்தம் சாலை பரப்பளவு 1492.75 சதுர மீட்டர் இடமும், பொது உபயோகத்திற்காக 56.84 சதுர மீட்டர் இடமும் ஆணையாளர் பெயரில் தானமாக பத்திர பதிவு செய்து, நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், நாமக்கல் அவர்கள் மூலம் நகராட்சியில் சமர்ப்பித்துள்ளதை பின்னேற்பு ஒப்புதல் பெறுவதற்கும், மேற்க்கண்ட மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் பெறுவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

அரசாணை (நிலை) எண். 181 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள் 09.12.2020 மற்றும் நகராட்சி நிருவாக இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண். 12843/ 22/டிபி2 நாள் 20.10.2022 சுற்றறிக்கையின்படியும், மேற்க்கண்ட தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ள மனைப்பிரிவிலுள்ள சாலை மற்றும் பொது ஒதுக்கீடு இடங்களை தானப்பத்திரத்தின்படி தானமாக ஒப்படைக்கப்பட்ட சொத்துக்களை இந்நகராட்சி பராமரிப்பிற்கு ஏற்க, தானமாக பத்திரப்பதிவு செய்ததை இம்மன்றம் பின்னேற்பு ஒப்புதல் வழங்கலாம் மற்றும் மேற்க்கண்ட மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கலாம்.

(4014/23/எப்1)

**தீர்மானம் எண். 502**

ஒப்புதல் வழங்கப்பட்டது

**(13)** இராசிபுரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 15–இல் உள்ள சி.பி. கன்னைய்யா தெருவிலுள்ள பொதுக் கழிப்பிடத்தில் தரைகள் மற்றும் டேங்க் பழுதடைந்தும், பைப் லைன் அனைத்தும் பழுதடைந்தும் உள்ளது. எனவே, அதனை பழுது நீக்கம் செய்ய புதியதாக தரைதளத்திற்கு டைல்ஸ் மற்றும் பிவிசி டேங்க் பொருத்தி பைப் லைன் செய்ய மதிப்பீட்டுத் தொகை ரூ. 3.00 இலட்சத்திற்கு பொருள் வைக்க குடிநீர் நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம். (5467/23/இ2)

**தீர்மானம் எண். 503**

அனுமதிக்கப்பட்டது

**(14)** இராசிபுரம் நகராட்சியிலுள்ள வார்டு எண். 20–இல் பழனி தெருப் பகுதியிலுள்ள கழிப்பிட அறைகளிலுள்ள கதவுகள் பழுதடைந்துள்ளதால் அதனை பழுது நீக்கம் செய்யவும் பழுதடைந்த Water closet–ஐ புதியதாக மாற்றவும், பழுதடைந்த மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியினை மாற்றி புதியதாக பிவிசி டேங்க் அமைக்கவும் ரூ. 90000/– உத்தேச செலவினம் குடிநீர் நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம். ( 5468/23/இ2)

**தீர்மானம் எண். 504**

அனுமதிக்கப்பட்டது

**( 15 )** இராசிபுரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். **11**–இல் வெங்கடசாமி தெரு மற்றும் வார்டு எண். **23**–இல் நகர சுத்தி காலனிப் பகுதியில் சேர்த்து **3** பிவிசி டேங்குகள் உடைந்து பழுதடைந்து உபயோகப்படுத்த இயலாத நிலையிலுள்ளதால் அதனை புதியதாக மாற்றம் செய்யவும், வார்டு எண். **16**–இல் தெற்கு கச்சேரி தெருப் பகுதியிலுள்ள **4**"CI Sluice பழுதடைந்துள்ளதை புதியதாக மாற்றிப் பொருத்தம் செய்ய வேண்டியுள்ளது. எனவே, அதற்கான மதிப்பீடு தொகை ரூ. **1.60** இலட்சம் குடிநீர் நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம். **(5470/23/இ2)**

**தீர்மானம் எண். 505**

அனுமதிக்கப்பட்டது

**( 16 )** இராசிபுரம் நகராட்சியில் வார்டு எண்.**1**–இல் உள்ள மேற்கு காலனி மற்றும் குமாரசாமி தெருப் பகுதியில் புதியதாக மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகள் அமைக்கப்பட்டுள்ளது. மேற்க்கண்ட தொட்டியிலிருந்து பைப் லைன் நீட்டிப்பு செய்து பணிகள் மேற்க்கொள்ள ரூ. **80000/–** மதிப்பீட்டிலான செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலகக்குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம். **(5465/23/இ2)**

**தீர்மானம் எண். 506**

அனுமதிக்கப்பட்டது

**( 17 )** இராசிபுரம் நகராட்சியில் நடைபெறும் திட்டப்பணிகளின் விவரங்களை பொதுமக்கள் அறியும் பொருட்டு தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்ததற்கு கட்டணங்கள் பின்வருமாறு :

| வ. எண் | விளம்பரத்தின் விவரம் | நாளிதழின் விவரம் | விளம்பரக் கட்டணம் |
|---|---|---|---|
| 1 | இராசிபுரம் நகராட்சியில் நடைபெற்ற இரண்டாண்டு திட்டப்பணிகளின் விவரம் | தினதந்தி நாளிதழ் | ரூ. 21,924/– |
| 2 | இராசிபுரம் நகராட்சி கூட்டுக்குடிநீர் திட்ட பணிகளின் விவரம் | தினதந்தி நாளிதழ் | ரூ. 24,360/– |
| 3 | இராசிபுரம் நகராட்சியில் நடைபெற்ற இரண்டாண்டு திட்டப்பணிகளின் விவரம் | மாலைமலர் நாளிதழ் | ரூ. 9,900/– |
| 4 | இராசிபுரம் நகராட்சியில் நடைபெற்ற இரண்டாண்டு திட்டப்பணிகளின் விவரம் | எக்பிரஸ் இந்தியா (தினமணி தொழில் மலர்) | ரூ. 21,000/– |

**அலுவலகக்குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. செலவினத் தொகை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(5052/23/இ1)**

**தீர்மானம் எண். 507**

அனுமதிக்கப்பட்டது

( 18 ) இராசிபுரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 9–இல் உள்ள வி.நகர் ரோடு எண். 2–இல் உள்ள கழிப்பிடத்தில் ஒரு பகுதியிலுள்ள கட்டிடத்தை இடித்துவிட்டு அதன் அருகே உள்ள பழுதடைந்த கழிப்பிடத்தின் மேல்தளம் பழுது நீக்கம் செய்யவும், மேல்நிலை நீர்தேக்கத் தொட்டியிலுள்ள பழுதுகளை நீக்கம் செய்யவும், தண்ணீர் பைப் லைன் புதியதாக அமைக்கவும், ஆகியப் பணிகளை மேற்கொள்ள ரூ. 2.00 இலட்சம் மதிப்பீட்டிலான செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம். **(5466/23/இ1)**

**தீர்மானம் எண். 508**

அனுமதிக்கப்பட்டது

( 19 ) இராசிபுரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 2–இல் உள்ள வள்ளலார் சாலையில் உப்புநீர் வசதி செய்து, பைப் லைன் நீட்டிப்பு செய்யவும், கோரைக்காடு பகுதியில் குடிநீர் பகிர்மான குழாய் நீட்டிப்பு செய்யவும் மற்றும் வார்டு எண். 25–இல் கோனேரிப்பட்டி காலனி தெருவில் உப்புநீர் வசதி செய்து பைப் லைன் நீட்டிப்பு செய்தல் ஆகியப் பணிகளை மேற்க்கொள்ள ரூ. 2.50 லட்சம் மதிப்பீட்டிலான செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(5469/23/இ2)**

**தீர்மானம் எண். 509**

அனுமதிக்கப்பட்டது

( 20 ) இராசிபுரம் நகராட்சி அலுவலகத்திலுள்ள பொதுப்பிரிவு, பொறியியல் பிரிவு, பொது சுகாதாரப் பிரிவு மற்றும் நகரமைப்புப் பிரிவுகளில் மின் இணைப்பு இல்லாத நேரங்களில் கணினிகளை உபயோகப்படுத்த, பொதுப்பிரிவு மற்றும் நகரமைப்புப் பிரிவிற்கு ஏற்கனவே உள்ள UPS பேட்டரிகளை பழுது நீக்கம் செய்யவும், பொறியியல் பிரிவு 2.5 KVA அளவுள்ள UPS மற்றும் பொது சுகாதாரப் பிரிவிற்கு 2.0 KVA அளவுள்ள UPS புதியதாக அமைக்கவும் உத்தேச செலவினம் தொகை ரூ. 4.50 இலட்சத்திற்கு வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(5471/23/இ1)**

**தீர்மானம் எண். 510**

அனுமதிக்கப்பட்டது

(21) இராசிபுரம் நகராட்சி கொசுத்தடுப்பு பணியியை பாபாஜி சுய உதவி குழுவினர் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இக்குழுவின் பணிக்காலம் 01.07.2023 முதல் மேலும் ஓராண்டுக்கு நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்கொள்வதை மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

(1550/18/எச்1)

**தீர்மானம் எண். 511**

அனுமதிக்கப்பட்டது

**(22)** இராசிபுரம் நகராட்சி நெடுஞ்சாலை துறைக்குச் சொந்தமான ஆத்தூர் மெயின் ரோடு (ஆஞ்சநேயர் கோவில் முதல் காஞ்சி சூப்பர் மார்கெட் வரை) புதியதாக குடிநீர் குழாய் அமைத்தல் மற்றும் பழுதடைந்த குடிநீர் இணைப்புகள் சரி செய்தல் பணி மேற்கொள்ள ரூ. 3.50 இலட்சம் மதிப்பீட்டிலான பணிக்கு 17.11.2023–இல் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு.

1. JP Construction ஒப்பந்ததாரர், இராசிபுரம் – மதிப்பீட்டைவிட 0.05 % குறைவு
2. P &B Enterprises, ஒப்பந்ததாரர், இராசிபுரம் –மதிப்பீட்டைவிட 0.35 % அதிகம்

மதிப்பீட்டைவிட குறைவான விலைப்புள்ளி (0.05%) அளித்துள்ள JP Construction ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று ஏற்றுக்கொள்ளப்பட்டு பணியாணை வழங்க மன்றத்தின் அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

மதிப்பீட்டைவிட குறைவான விலை விகிதம் அளித்துள்ள JP Construction ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று பணியாணை வழங்க மன்றம் அங்கீகரிக்கலாம்.

(4762/23/இ1)

**தீர்மானம் எண். 512**

அங்கீகரிக்கப்பட்டது

**(23)** இராசிபுரம் நகராட்சிப் பகுதியில் புதியதாக கட்டப்பட்டுள்ள தினசரி சந்தையின் கட்டிடத்தின் சுற்றியுள்ள கான்கீரிட் தளம் அமைத்தல் மற்றும் மழைநீர் சேகரிப்பு மற்றும் வெளியேறுவதற்கான அமைத்தல் பணி மேற்க்கொள்ள ரூ.12.00 இலட்சம் மதிப்பீட்டிலான பணிக்கு 17.11.2023–இல் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு.

1. M/S முருகன் கன்ஸ்ட்ரக்ஷன், இராசிபுரம் – மதிப்பீட்டைவிட 0.03 % குறைவு
2. M/S ஹரி கன்ஸ்ட்ரக்ஷன், இராசிபுரம் – மதிப்பீட்டைவிட 291.22 % அதிகம்

மதிப்பீட்டைவிட குறைவான விலைப்புள்ளி (0.03%) அளித்துள்ள M/S. முருகன் கன்ஸ்ட்ரக்ஷன் ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று ஏற்றுக்கொள்ளப்பட்டு பணியாணை வழங்க மன்றத்தின் அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மதிப்பீட்டைவிட குறைவான விலை விகிதம் அளித்துள்ள M/S முருகன் கன்ஸ்ட்ரக்ஷன் ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று பணியாணை வழங்க மன்றம் அங்கீகரிக்கலாம்.

(4782/23/இ1)

**தீர்மானம் எண். 513**

அங்கீகரிக்கப்பட்டது

**(24)** இராசிபுரம் நகராட்சிப் பகுதியில் நெடுஞ்சாலைத் துறைக்கு சொந்தமான ஆத்தூர் மெயின் ரோடு (ஆஞ்சநேயர் கோவில் முதல் காஞ்சி சூப்பர் மார்கெட் வரை) பழுதடைந்த பாதாள சாக்கடை இணைப்புகள் சரி செய்தல் பணி மேற்க்கொள்ள ரூ. 95,000/– மதிப்பீட்டிலான பணிக்கு 17.11.2023–இல் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு.

| | | |
|---|---|---|
| 1. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், இராசிபுரம் | – | மதிப்பீட்டைவிட 0.03 % குறைவு |
| 2. திரு. K.G சீனிவாசன் | – | மதிப்பீட்டைவிட 291.22 % அதிகம் |

மதிப்பீட்டைவிட குறைவான விலைப்புள்ளி (0.89%) அளித்துள்ள தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று ஏற்றுக்கொள்ளப்பட்டு பணியாணை வழங்க மன்றத்தின் அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மதிப்பீட்டைவிட குறைவான விலை விகிதம் அளித்துள்ள தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று பணியாணை வழங்க மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(4762/23/இ1)**

**தீர்மானம் எண். 514**

அங்கீகரிக்கப்பட்டது

**(25)** இராசிபுரம் நகராட்சிப் பகுதியில் வார்டு எண்.17–இல் வரதன் தெருவில் புதியதாக அமைக்கப்படும் கழிப்பிடத்தின் மேல் தளத்தில் 3000 லிட்டர் கொள்ளளவு கொண்ட நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து அப்பகுதியில் பைப் லைன் நீட்டிப்பு செய்தல் பணி மேற்கொள்ள ரூ. 2.80 மதிப்பீட்டிலான பணிக்கு 17.11.2023–இல் வரப்பெற்றுள்ள ஒப்பயதப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு.

| | | |
|---|---|---|
| 1. M/S. சுமதி இன்ப்ராடெக் பில்டர்ஸ், இராசிபுரம் | - | மதிப்பீட்டைவிட 0.83 % அதிகம் |
| 2. M/S. முருகன் கன்ஸ்ட்ரக்ஷன், இராசிபுரம் | – | மதிப்பீட்டைவிட 0.07 % குறைவு |

மதிப்பீட்டைவிட குறைவான விலைப்புள்ளி (0.07%) அளித்துள்ள M/S முருகன் கன்ஸ்ட்ரக்ஷன் ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று ஏற்றுக்கொள்ளப்பட்டு பணியாணை வழங்க மன்றத்தின் அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மதிப்பீட்டைவிட குறைவான விலை விகிதம் அளித்துள்ள M/S. முருகன் கன்ஸ்ட்ரக்ஷன் ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று பணியாணை வழங்க மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(4866/23/இ1)**

**தீர்மானம் எண். 515**

அங்கீகரிக்கப்பட்டது

**(26)** இராசிபுரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 16, நகரளவை எண். 35, பகுதி–90, வார்டு–சி, பிளாக் 12–இல் 1960–ஆம் ஆண்டு முதல் நடப்பாண்டு வரை செயல்பட்டு வந்த தினசரி மார்க்கெட் கடையின் மேல்கூரைகள் சிதலடைந்து விழுந்துவிடும் நிலையில் செயல்பட்டு வந்ததால், கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 2021–2022–இன்கீழ் ரூ. 243.00

இலட்சத்தில் தினசரி மார்க்கெட்டில் கட்டிடம் கட்டும் பணி முடிவுறும் தருவாயில் உள்ளது. தினசரி மார்க்கெட்டிற்காக GI Sheet Shed –I, II, III மற்றும் IV என நான்கு Shed–களும், 58 கடைகளும் கட்டப்பட்டுள்ளது. மேற்படி ஆண்டு குத்தகை இனங்களை பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர வேண்டியுள்ளது. அதன்படி இந்நகராட்சிக்குச் சொந்தமான தினசரி மார்க்கெட்டில் உள்ள 58 கடைகள் மற்றும் GI Sheet Shed –I, II, III மற்றும் IV என நான்கு Shed–களும், தினசரி மார்க்கெட் கழிப்பறையும் பகிரங்க ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும் ஏல அறிவிக்கைகள் 100 பிரதிகள் ஒப்பந்தப்புள்ளி கோர அச்சிடவும் மாவட்ட அரசிதழில் வெளியிடவும் ஏல அறிவிப்பை மக்கள் தொடர்பு அலுவலர், நாமக்கல் அவர்கள் மூலம் தினசரி நாளிதழில் ஒருமுறை விளம்பரப்படுத்தவும் அதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதி கோரி மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம். (2023/22/அ2)

**தீர்மானம் எண். 516**

அனுமதிக்கப்பட்டது

**(27)** நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA.IV) துறை நாள் **16.06.2023** அரசாணை (நிலை) எண். 337–இல் கொரோனா நோய் தொற்று பரவாமல் தவிர்க்கும் பொருட்டு மத்திய அரசு மற்றும் மாநில அரசால் பிறப்பிக்கப்பட்ட ஊரடங்கு காலத்தில் நகராட்சிக்கு சொந்தமான வணிக வளாகங்களில் வணிகம் மேற்கொள்ளாமல் இருந்த கடைகள் மற்றும் ஆண்டு குத்தகை இனங்களுக்கு கொரோனா நோய் தொற்று முதல் அலை காலமான **2020–2021** நிதியாண்டில் **01.06.2020** முதல் **31.08.2020** வரை மூன்று மாதங்களுக்கும், கொரோனா நோய் தொற்று இரண்டாம் அலை காலமான **2021 – 2022** நிதியாண்டில் **01.05.2021** முதல் **30.06.2021** ஆகிய இரண்டு மாதங்களுக்கும் வாடகை மற்றும் உரிமத்தொகையினை தள்ளுபடி செய்து ஆணையிடப்பட்டுள்ளது. மேற்படி அரசாணையின்படி, ஜுன் 2020, ஜுலை 2020, ஆகஸ்ட் 2020, மே 2021 மற்றும் ஜுன் 2021 ஆகிய ஐந்து மாதங்களுக்கு கணக்கிடப்பட்ட கீழ்க்காணும் விவரப்படியான ரூ. 65,90,494/–க்கான தொகைகளை தள்ளுபடி செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| **வ. எண்** | **ஒன்பதாண்டு குத்தகை இனங்கள்** | **மொத்த கடைகளின் எண்ணிக்கை** | **தள்ளுபடி செய்யப்பட வேண்டிய கடைகளின் எண்ணிக்கை** | **தொகை ரூ.** |
|---|---|---|---|---|
| 1 | கொரோனா முதல் அலை காலமான ஜுன் 2020, ஜுலை 2020 மற்றும் ஆகஸ்ட் 2020 ஆகிய மூன்று மாதத்திற்கு தள்ளுபடி செய்யப்படும் உரிம இனங்களின் எண்ணிக்கை | 160 | 160 | 28,09,590/– |
| | கொரோனா இரண்டாம் அலை காலமான மே 2021 மற்றும் ஜுன் 2021 ஆகிய இரண்டு மாதத்திற்கு தள்ளுபடி செய்யப்படும் உரிம இனங்களின் எண்ணிக்கை. | 160 | 160 | 18,73,060/– |
| **தள்ளுபடி செய்ய வேண்டிய மொத்த தொகை** | | | | **46,82,650/–** |

| **வ. எண்** | **ஓராண்டு குத்தகை இனங்கள்** | **மொத்த குத்தகை இனங்களின்** | **தள்ளுபடி செய்யப்பட வேண்டிய** | **தொகை ரூ.** |
|---|---|---|---|---|

| | | எண்ணிக்கை | இனங்களின் எண்ணிக்கை | |
|---|---|---|---|---|
| 1 | கொரோனா முதல் அலை காலமான ஜூன் 2020, ஜூலை 2020 மற்றும் ஆகஸ்ட் 2020 ஆகிய மூன்று மாதத்திற்கு தள்ளுபடி செய்யப்படும் உரிம இனங்களின் எண்ணிக்கை | 11 | 11 | 16,81,904/– |
| | கொரோனா இரண்டாம் அலை காலமான மே 2021 மற்றும் ஜூன் 2021 ஆகிய இரண்டு மாதத்திற்கு தள்ளுப்படி செய்யப்படும் உரிம இனங்களின் எண்ணிக்கை. | 11 | 11 | 2,25,940/– |
| தள்ளுபடி செய்ய வேண்டிய மொத்த தொகை | | | | 19,07,844/– |

அலுவலகக்குறிப்பு :

1) மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) அரசாணையின்படி ஒன்பதாண்டு குத்தகை இனங்களுக்கு ஐந்து மாதங்களுக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டிய தொகை ரூ. 46,82,650/– மற்றும் ஓராண்டு குத்தகை இனங்களுக்கு ஐந்து மாதங்களுக்கு தள்ளுபடி செய்ய வேண்டிய தொகை ரூ. 19,07,844/– ஆக இரண்டு இனங்களுக்கும் தள்ளுபடி செய்ய வேண்டிய மொத்த தொகை ரூ. 65,90,494/–ஐ தள்ளுபடி செய்ய மன்றம் அனுமதி வழங்கலாம்.

(5245/22/அ2)

**தீர்மானம் எண். 517**

அனுமதி வழங்கப்பட்டது

**(28)** இராசிபுரம் நகராட்சிக்குட்பட்ட பொதுமக்கள் மற்றும் சுற்று வட்டார பொதுமக்கள் பயன்பாட்டிற்கு, தினசரி மார்க்கெட் (Daily Market) வார்டு எண். 16, நகரளவை எண். 35 பகுதி–90, வார்டு–சி, பிளாக்–12–இல் 1960–ஆம் ஆண்டு முதல் நடப்பாண்டு வரை பயன்பாட்டிலுள்ளது. தினசரி மார்க்கெட் (Daily Market) 60 ஆண்டுகளுக்கு மேலாக இயங்கி வந்தது. மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் அவர்களால் 24.08.2021–ஆம் தேதியன்று சட்டப் பேரவையில் அனைத்து நகராட்சிகள், பேரூராட்சிகளில் கலைஞர் நகர்புற மேம்பாட்டுத் திட்டத்தில் ரூ. 1000 கோடி மதிப்பீட்டில் சமுதாயக் கூடம், சந்தைகள் மற்றும் நூலகங்கள் போன்ற கட்டிடங்கள் கட்டிக்கொள்ள அறிவிப்பு வெளியிடப்பட்டது.

அதனடிப்படையில், கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 2021–2022–இன்கீழ், இராசிபுரம் நகராட்சி தினசரி மார்க்கெட்டினை மேம்படுத்தும் பொருட்டு, அரசாணை எண். 15 நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 20.01.2022–இல் ரூ. 243.00 இலட்சத்திற்கு நிருவாக அனுமதி வழங்கப்பட்டது. மேற்படி, தினசரி மார்க்கெட்டிலுள்ள கட்டிடங்கள் மிகவும் பழுதடைந்த நிலையிலும், கடையின் மேற்கூரைகள் சிதிலமடைந்து விழுந்துவிடும் நிலையிலும் செயல்பட்டு வந்தது. அதனடிப்படையில், தினசரி மார்க்கெட்டில் கட்டிடம் கட்டும் பணி முடிவுறும் தருவாயிலுள்ளது. எனவே, கீழ்க்காணும் விவரப்படி தினசரி மார்க்கெட்டிற்காக GI Sheet Shed –I, GI Sheet Shed – II, GI Sheet Shed –III and GI Sheet Shed –IV vd eh‹F Shed–களும், 58 கடைகளும் கீழ்க்காணும் சதுரடி அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளது.

எனவே, இந்த இனங்களை பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் உரிமம் ஒப்படைக்க கீழ்க்காணும் விவரப்படிக்கான ஏல வைப்புத் தொகை மற்றும் நிபந்தனைகளைக்

கொண்ட பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு வெளியிட மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

## ஆண்டு உரிம இனம் விவரம்

<table>
<tr><th>வ. எண்</th><th>உரிம இனங்களின் பெயர்</th><th>கடைகளின் அளவு விவரம்</th><th>ஏலம் / ஒப்பந்தப் புள்ளிக்கு செலுத்த வேண்டிய வைப்புத் தொகை ரூ.</th><th>வங்கி உத்திரவாத சான்று</th><th>சொத்து மதிப்பு சான்றிதழ் இல்லாதவர்கள் கூடுதலாக செலுத்த வேண்டிய வைப்புத் தொகை ரூ.</th><th>ஏலம் / ஒப்பந்தப் புள்ளி உறுதியான பின் செலுத்த வேண்டிய தொகை (ஏல முன் தொகை வைப்புத் தொகை நீங்களாக)</th></tr>
<tr><td>1</td><td>தினசரி அங்காடி நடை மேடை கடை GI Sheet – I (12 கடைகள்) (கடை எண். 1 முதல் 12 வரை)</td><td>8X7.75 = 62 சதுரடி = 12 கடைகள் (744 சதுரடி)</td><td rowspan="4">1000000</td><td rowspan="4">1500000</td><td rowspan="4">200000</td><td rowspan="4">ஒரு ஆண்டிற்கான உரிமத் தொகை முழுவதும் மற்றும் சுங்கக் கட்டணத்துடன் 18% GST தொகை செலுத்தப்பட வேண்டும்.</td></tr>
<tr><td>2</td><td>தினசரி அங்காடி நடை மேடை கடை GI Sheet - II (14 கடைகள்) (கடை எண். 13 முதல் 26 வரை)</td><td>8.25X7.75 = 64 சதுரடி = 14 கடைகள் (896 சதுரடி)</td></tr>
<tr><td>3</td><td>தினசரி அங்காடி நடை மேடை கடை GI Sheet - III (8 கடைகள்) (கடை எண். 27 முதல் 34 வரை)</td><td>9.5X10.5= 100 சதுரடி = 8 கடை (800 சதுரடி)</td></tr>
<tr><td>4</td><td>தினசரி அங்காடி நடை மேடை கடை GI Sheet - IV (8 கடைகள்) (கடை எண். 35 முதல் 42 வரை)</td><td>10.25X11 = 113 சதுரடி = 8 கடை (904 சதுரடி)</td></tr>
</table>

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | **மொத்தம் 1 முதல் 42 கடைகள்** | **3344 சதுரடி** | | | | |

## மூன்றாண்டு உரிம இனம் விவரம்

| வ. எண் | உரிம இனங்களின் பெயர் | கடைகளின் அளவு விவரம் | ஏலம் / ஒப்பந்தப் புள்ளிக்கு செலுத்த வேண்டிய வைப்புத் தொகை ரூ. (ஏலம், ஒப்பந்தப்புள்ளிக்கு தனித்தனியாக வைப்புத் தொகை செலுத்த வேண்டும்) | ஏலம் / ஒப்பந்தப்புள்ளி உறுதியான பின் செலுத்த வேண்டிய தொகை (ஏல முன் வைப்புத் தொகை நீங்களாக) ரூ. | வருமான வரி, சரக்கு மற்றும் சேவை வரி (GST) |
|---|---|---|---|---|---|
| 1 | தினசரி மார்க்கெட் கடை எண். 1 முதல் 2 கடை வரை 2 கடைகள் | 9'X21'9"=197 சதுரடி = 1 கடை | 2,00,000/– | ஒரு வருட வாடகையை வைப்புத் தொகையாக முழுவதும் செலுத்த வேண்டும் | பிரதி மாதம் வாடகையுடன் 18% GST செலுத்தப்பட வேண்டும் |
| 2 | தினசரி மார்க்கெட் கடை எண். 3 | 20.75X9 (3.5x6.75) = 163 சதுரடி = 1 கடை | 1,75,000/– | ஒரு வருட வாடகையை வைப்புத் தொகையாக முழுவதும் செலுத்த வேண்டும் | பிரதி மாதம் வாடகையுடன் 18% GST செலுத்தப்பட வேண்டும் |
| 3 | தினசரி மார்க்கெட் கடை எண். 4 முதல் 8 வரை 5 கடைகள் | 8.9'X13'9"=124 சதுரடி | 1,25,000/– | ஒரு வருட வாடகையை வைப்புத் தொகையாக முழுவதும் செலுத்த வேண்டும் | பிரதி மாதம் வாடகையுடன் 18% GST செலுத்தப்பட வேண்டும் |
| 4 | தினசரி மார்க்கெட் கடை எண். 9 முதல் 29 வரை 21 கடைகள். | 8.12'X3"=98 சதுரடி | 1,00,000/– | ஒரு வருட வாடகையை வைப்புத் தொகையாக முழுவதும் செலுத்த வேண்டும் | பிரதி மாதம் வாடகையுடன் 18% GST செலுத்தப்பட வேண்டும் |
| 5 | தினசரி மார்க்கெட் கடை எண். 30 முதல் 39 வரை 10 கடைகள் | 10'X14'8"=147 சதுரடி | 1,50,000/– | ஒரு வருட வாடகையை வைப்புத் தொகையாக முழுவதும் செலுத்த வேண்டும் | பிரதி மாதம் வாடகையுடன் 18% GST செலுத்தப்பட வேண்டும் |
| 6 | தினசரி மார்க்கெட் கடை எண். 40 முதல் 49 வரை 10 கடைகள் | 10'X13"=130 சதுரடி | 1,25,000/– | ஒரு வருட வாடகையை வைப்புத் தொகையாக முழுவதும் செலுத்த வேண்டும் | பிரதி மாதம் வாடகையுடன் 18% GST செலுத்தப்பட வேண்டும் |
| 7 | தினசரி மார்க்கெட் கடை எண். 50 | 16'9X21"=352 சதுரடி | 3,50,000/– | ஒரு வருட வாடகையை வைப்புத் தொகையாக முழுவதும் செலுத்த வேண்டும் | பிரதி மாதம் வாடகையுடன் 18% GST செலுத்தப்பட வேண்டும் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 8 | தினசரி மார்க்கெட் கடை எண். 51 முதல் 53 வரை 3 கடைகள் | 9.5X9.75=93 சதுரடி | 1,00,000/– | ஒரு வருட வாடகையை வைப்புத் தொகையாக முழுவதும் செலுத்த வேண்டும் | பிரதி மாதம் வாடகையுடன் 18% GST செலுத்தப்பட வேண்டும் |
| 9 | தினசரி மார்க்கெட் கடை எண். 54 | 21.75X9.5=207சதுரடி | 2,00,000/– | ஒரு வருட வாடகையை வைப்புத் தொகையாக முழுவதும் செலுத்த வேண்டும் | பிரதி மாதம் வாடகையுடன் 18% GST செலுத்தப்பட வேண்டும் |
| 10 | தினசரி மார்க்கெட் கடை எண். 55 முதல் 58 வரை 4 கடைகள் | 9.5X9.75 = 93 சதுரடி | 1,00,000/– | ஒரு வருட வாடகையை வைப்புத் தொகையாக முழுவதும் செலுத்த வேண்டும் | பிரதி மாதம் வாடகையுடன் 18% GST செலுத்தப்பட வேண்டும் |

## ஏல நிபந்தனைகள்

1. ஏல வைப்புத் தொகையினை ஆணையாளர், இராசிபுரம் நகராட்சி என்ற பெயருக்கு இராசிபுரம் நகரில் செயல்படும் ஏதாவது ஒரு தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் பெற்ற வரைவோலையினை ஒவ்வொரு இனத்திற்கும் தனித்தனியே கொடுத்து ஏலத்தில் கலயது கொள்ள வேண்டும். பணமாக ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. வங்கி வரைவோலையினை ஏலம் நடைபெறும் முதல் நாளன்று 4.00 மணிக்குள் அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும். அதற்குப் பின்னர் பெறப்படும் வரைவோலைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
2. ஒப்பந்தப்புள்ளிக்கு வழங்கப்படும் வங்கி வரைவோலை வைத்து ஏலத்தில் கலந்து கொள்ள முடியாது. ஏலத்தில் கலந்து கொள்ள வேண்டுமெனில் தனியாக வங்கி வரைவோலை சமர்பிக்க வேண்டும்.
3. நகராட்சியில் வழங்கப்படும் அத்தாட்சி சான்று உள்ளவர்கள் மட்டுமே பொது ஏலத்தில் கலந்து கொள்ள முடியும்.
4. உரிம இனத்திற்கு ஒப்பந்தப்புள்ளி வழங்குவோர் உரிமத் தொகை விவரத்தினை எண்ணாலும் எழுத்தாலும் எழுதி தனி கவரில் ஒட்டி சீல் வைத்து டெண்டர் பெட்டியில் காலை 11.00 மணிக்குள் போடப்பட வேண்டும்.
5. ஏல தேதி அல்லது ஏல நாள் பொது விடுமுறை நாளாக இருந்தாலோ அல்லது நிருவாக காரணங்களுக்காக ஏலம் நடைபெறாமல் இருந்தாலோ வேறு ஒரு நாளுக்கு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியினை ஒதுக்கி வைக்க ஆணையருக்கு முழு அதிகாரமுண்டு.
6. வங்கி வரைவோலை மற்றும் செலுத்தப்பட்ட பொறுப்புத் தொகைகள் ஏலம் கிடைக்க பெறாதவர்களுக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் நகர்மன்றத்தில் உறுதி செய்த பின்னரே திருப்பி கொடுக்கப்படும்.
7. ஒரு ஆண்டு குத்தகை இனங்களுக்கு வருடம் ஒருமுறை உரிமத் தொகையில் 5 % உயர்வு செய்யப்படும்.
8. மூன்றாண்டு குத்தகை இனங்களுக்கு மூன்று வருடங்களுக்கு ஒருமுறை உரிமத் தொகையில் 15 % உயர்வு செய்யப்பட்டு, உயர்வு செய்யப்படும், வாடகை வித்தியாசத் தொகையினை 12 மாத வைப்புத் தொகையாக செலுத்தப்பட வேண்டும்.
9. மூன்றாண்டு குத்தகை இனங்கள் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்யப்பட்டால் ஏல விவரம் 12 மாத வாடகையை வைப்புத் தொகையாக செலுத்த வேண்டும்.
10. ஒவ்வொரு மாதமும் செலுத்தப்படும் வாடகைத் தொகைக்கும் 18 % தனியாக சேவை வரி செலுத்த வேண்டும்.
11. தினசரி அங்காடி கடைகளுக்கு ஏலம் உறுதி செய்தப் பின்னர் நகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்ட தினசரி குத்தகை தொகையுடன் GST வசூல் செய்யப்பட வேண்டும் .

12. தினசரி அங்காடி கடை GI Sheet Shed –I, II, III மற்றும் IV–இல் நகராட்சியால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள Shed–களில் கடை மட்டுமே நடத்தப்பட வேண்டும். ஒதுக்கீடு செய்யப்படாத காலியிடங்களில் கடை நடத்த அனுமதிக்கப்பட்டால் தங்களது உரிமம் ரத்து செய்யப்படும்.
13. 2021–2024–ஆம் ஆண்டு பொது மற்றும் சிறப்பு ஏல நிபந்தனைகள் அனைத்தும் இதற்கும் பொருந்தும்.
14. ஏலம் தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்கு ஏற்படும்பட்சத்தில் வழக்கின் முடிவை பொறுத்து ஏலம் இறுதி செய்யப்படும்.
15. அரசு மற்றும் நகராட்சியால் அவ்வப்போது நிர்ணயம் செய்யப்படும் கட்டண விகிதங்களுக்குட்பட வேண்டும்.

### 1. தினசரி சந்தையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமைக்கான நிபந்தனைகள் : –

1. ஏலதாரர் கடந்த மூன்று நிதியாண்டுகளில் வருமான வரி தாக்கல் செய்த விவரங்களை சமர்ப்பிக்க வேண்டும்.
2. தொற்று நோய் உள்ளவர்களையும் பெரும் நோய் உள்ளவர்களையும் சந்தைக்குள் வர விடக்கூடாது. தினசரி சந்தையை உபயோகிக்கும் பொது ஜனங்கள் சௌகரியம், பாதுகாப்பு, சுகாதாரம் முதலியவை குறையாமல் பார்த்துக்கொள்வது உரிமதாரரின் பொறுப்பாகும்.
3. தினசரி சந்தையில் வசூலிக்க வேண்டிய இராசிபுரம் நகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்ட கட்டண விவரங்களைக் காட்டும் அறிவிப்புப் பலகை ஒன்று உரிமதாரர் தமது சொந்த செலவில் வைக்க வேண்டும். அறிவிப்புப்பலகையில் உள்ளபடி உரிமதாரர் கட்டணம் வசூலிக்க வேண்டும். தினசரி சந்தையில் வசூலிக்கும் இனங்களுக்குரிய இரசீது கொடுக்கப்பட வேண்டும். இரசீது புத்தகத்தில் அலுவலக முத்திரை வைத்துக் கொள்ள வேண்டும். அலுவலக முத்திரை இல்லாத இரசீதுகள் செல்லுபடியாகாது. இது சம்மந்தமாக புகார் வரப்பெற்றால் உரிமம் இரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். இரசீதுகளில் நகராட்சி முத்திரை பதித்து வழங்க தவறும்பட்சத்தில் மாதம் ஒன்றுக்கு ரூ. 500/– அபராதம் விதித்து வசூலிக்கப்படும்.
4. உரிமதாரர் தன் சொந்த செலவில் ரூ. 100/– மதிப்புள்ள முத்திரைத்தாளில் நகராட்சியின் சட்ட திட்டங்களுக்கு கட்டுப்பட்டு நடக்கிறேன் எனவும், நகராட்சிக்கு எதிராக எந்தவொரு நீதிமன்றத்திலும் வழக்கு தொடருவதில்லை எனவும் ஒப்பந்தப்பத்திரம் எழுதி கொடுக்க வேண்டும்.
5. தினசரி சந்தை நகராட்சிப் பணியாளர்களால் சுத்தம் செய்யப்பட்டு குப்பைகளை நகராட்சிக்குச் சொந்தமான குப்பை கிடங்கிற்கு கொண்டு செல்லப்படும்.
6. தினசரி சந்தைக்குள் அந்தந்த வியாபாரத்திற்கென்று ஒதுக்கப்பட்ட இடத்தில் அந்தந்தக் கடைகள் இருக்கும்படி உரிமதாரர் பார்த்துக் கொள்ள வேண்டும். சந்தைக்கு வரும் வண்டிகளை போக்குவரத்திற்கு இடையூறின்றி ஒரு புறமாக நிறுத்தி வைக்க வேண்டும்.
7. தினசரி சந்தையில் சேரும் குப்பைக் கூளங்களை நகராட்சி தூய்மைப் பணியாளர்கள் மூலம் அகற்றுவதால் மூன்று GI Sheet Shed ஒவ்வொன்றுக்கும் ரூ. 50,000/–ஐ ஒவ்வொரு வருடமும் உரிமதாரர் செலுத்த வேண்டும். உரிமத் தொகை செலுத்தும்போது இந்த தொகை முழுவதும் முன்பணமாக நகராட்சி கருவூலகத்தில் செலுத்த வேண்டும்.
8. தினசரி உபயோகத்திற்கு தண்ணீர் எடுத்துச் செல்ல வரும் வண்டிகளுக்கும் மற்றும் பொது மக்களுக்கும் எவ்வித அசௌகரியங்களும் ஏற்படக்கூடாது. மேலும் தண்ணீர் வண்டிகளுக்கு சுங்கம் வசூலிக்கக் கூடாது. தண்ணீர் விலைக்கு விற்கக்கூடாது.
9. தினசரி சந்தைக்குள் உள்ள மின் விளக்குகளுக்கான மின் கட்டணத்தை உரிமதாரர் தனது சொந்த பொறுப்பில் மின்வாரிய அலுவலகத்தில் பிரதி மாதம் ஆணையாளர், இராசிபுரம் நகராட்சி என்ற பெயரில் செலுத்துதல் வேண்டும். மின்மானி (மீட்டர்) கோளாரானாலோ அல்லது மின்சார விதிகளுக்கு புறம்பாக குறைபாடுகள் மின்துறையினரால் கண்டுபிடிக்கப்பட்டால் அதனால் ஏற்படும் அனைத்து கஷ்ட நஷ்டங்களுக்கும் உரிமதாரர் முழுப் பொறுப்பாவார்கள். மேலும் மின் வாரியத்தாரால்

விதிக்கப்படும் தண்டத் தீர்வைக்கும் உரிமதாரர் முழுப்பொறுப்பாவார்கள். நகராட்சியை இது எவ்விதத்திலும் பொறுப்பாக்காது.

10. தினசரி சந்தைக்குள் டீ, காபி, பலகார வகைகள், சிற்றுண்டி, உணவு பதார்த்த கடைகள் வைக்கக்கூடாது.
11. தினசரி சந்தையைக் குறித்து இப்போது அமுலில் இருக்கும் கட்டுப்பாடுகளும் இனிமேல் அவ்வப்போது ஏற்படும் விதிகளுக்கும் உரிமைதாரர் கட்டுப்பட்டு நடக்க வேண்டும்.
12. தினசரி சந்தைக்குள் உரிமதாரர் (அல்லது) வேறு நபர்கள் நகர்மன்றத்தின் முன் அனுமதியின்றி எந்த ஒரு கட்டிடமும், அடைப்பு முதலியவைகளும் போடக்கூடாது. அப்படி அனுமதியில்லாமல் போடப்பட்டதை நகராட்சி மூலம் அப்புறப்படுத்திவிட்டு அதனால் ஏற்படும் செலவுத் தொகையை சம்மயதப்பட்ட உரிமதாரரிடமிருந்து வசூல் செய்யப்படும்.
13. உரிமம் விடப்பட்ட இடங்களில் சட்டம், ஒழுங்கு அமைதி நிலவ அவ்வப்போது உரிமதாரர் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டியது.
14. உரிமம் விடப்பட்ட காலம் முடிந்தவுடன் உரிமத்துக்கு விடப்பட்ட கட்டிடத்தை உரிமம் ஒப்புக் கொள்வதற்கு முன் இருந்த நிலையில் ஒப்படைக்க வேண்டும்.
15. தினசரி சந்தையின் நடைபாதையில் விற்பனை செய்ய உரிமதாரர் வியாபாரிகளை அனுமதிக்கக்கூடாது. அவ்விதம் வைத்திருக்கும் கடைகளை எவ்விதமான அறிவிப்பும் கொடுக்காமலேயே கடைகளை வைத்திருப்பவரின் பொறுப்பில் அப்புறப்படுத்த நகராட்சி ஆணையாளர் அல்லது அவரால் அதிகாரம் பெற்றவர்களுக்கு அதிகாரமுண்டு.
16. உரிமதாரர் தினசரி சந்தையிலுள்ள மின்சார இணைப்பிற்கு வைப்புத் தொகையாக ரூ.20,000/–ஐ நகராட்சிக்குச் செலுத்த வேண்டும். இதற்கு வட்டி ஏதும் வழங்கப்படமாட்டாது. இத்தொகை தணிக்கை முடிந்த பின்னரே வழங்கப்படும்.
17. தினசரி சந்தை காலை 5.00 மணிக்கு திறக்கப்பட்டு இரவு 8.00 மணிக்குள் கண்டிப்பாக மூடப்பட வேண்டும். கடை வைத்திருப்பவர்கள் அல்லது வேலையாட்கள் எவ்வித காரணத்தைக் கொண்டும் தினசரி சந்தையில் இரவு 8.00 மணிக்குமேல் காலை 5.00 மணி வரை இருக்க அனுமதிக்கக் கூடாது. தினசரி சந்தைக்குள் எவரும் குடியிருக்க கண்டிப்பாக அனுமதிக்கக் கூடாது. இதனை மீறியிருந்தால் உரிமம் ரத்து செய்யப்படும். இதனால் ஏற்படும் அனைத்து இழப்பிற்கும் உரிமதாரரே முழுப்பொறுப்பாவார்.
18. தினசரி சந்தைக்குள் வேடிக்கை, விநோத நிகழ்ச்சிகள் நகராட்சி ஆணையாளர் அவர்களின் முன் அனுமதியின்றி நடக்க அனுமதிக்கக் கூடாது.
19. எந்தெந்தக் கடை எதற்கென்று நகராட்சி ஆணையாளர் அவர்களால் ஏற்படுத்தப்படுகிறதோ அக்காரியத்திற்கு அல்லாமல் மற்ற காரியங்களுக்கு உபயோகிக்கக் கூடாது. தவிர கடைகளை உறைவிடங்களாக உபயோகிக்கக் கூடாது.
20. தினசரி சந்தைக்குள் கடைகள் வைத்திருக்கும் வியாபாரிகள் நகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்ட உரிமத் தொகையை உரிமதாரருக்கு கொடுக்கப்பட வேண்டும். அவ்வாறு தொகை தரவில்லையென நகராட்சியில் உரிமதாரர் புகார் செய்யும்பொழுது அந்தக் கடையை நகராட்சியால் சுவாதீனத்தில் எடுத்துக் கொள்ளவும் வேறு வியாபாரிகளுக்கு வழங்குவதற்கும் நகராட்சி ஆணையாளருக்கு உரிமையுண்டு.
21. மீன் மற்றும் இறைச்சிக் கழிவுகளை உரிமதாரர் சொந்தப் பொறுப்பிலே அகற்றிக் கொள்ள வேண்டும். நகராட்சியின் திடக்கழிவுடன் எக்காரணத்தைக் கொண்டும் சேர்க்கக் கூடாது. திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016–இன்படி முறையாக பொது சுகாதாரத்திற்கு பாதிப்பு ஏற்படாத வகையில் உரிமதாரர் சொந்தப் பொறுப்பிலே அகற்றிக் கொள்ள வேண்டும். அவ்வாறு இல்லாமல் கழிவுகளை வெளியே கொட்டினால் அபராதம் விதிக்கப்படும்.
22. கீழ் விவரிக்கப்பட்டுள்ள கட்டண விகிதங்களைத் தவிர அதிகமாக வசூலிக்கக்கூடாது.

**தினசரி சந்தைக்கு வரும் பொருட்களுக்கு சுங்கம் வசூல் செய்ய வேண்டிய கட்டண விவரம் :**

| வ. எண். | சுங்க விகிதம் | ரேட் விகிதம் ரூ. பை. |
|---|---|---|

| | | |
|---|---|---|
| 1. | சைக்கிளில் வரும் சிப்பம் 1–ற்கு | 5.00 |
| 2. | இரண்டு சக்கர மோட்டார் வாகனங்களில் வரும் சிப்பம் 1–ற்கு | 5.00 |
| 3. | கை வண்டியில் வரும் சிப்பம் 1–ற்கு | 5.00 |
| 4. | லாரியில் பாரம் வந்தால் லாரி ஒன்றிற்கு | 150.00 |
| 5. | டெம்போவில் பாரம் வந்தால் டெம்போ ஒன்றிற்கு | 100.00 |
| 6. | மினி ஆட்டோவில் பாரம் வந்தால் மினி ஆட்டோ ஒன்றிற்கு | 50.00 |
| 7. | GI Sheet Shed – I-இல் உள்ள 8X7.75 = 62 சதுரடி அளவிலான திறந்தவெளிக் கடை ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு | 90.00 |
| 8. | GI Sheet Shed – II-இல் உள்ள 8.25X7.75 = 64 சதுரடி அளவிலான திறந்தவெளிக் கடை ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு | 95.00 |
| 9. | GI Sheet Shed – III-இல் உள்ள 9.5X10.5= 100 சதுரடி அளவிலான திறந்தவெளிக் கடை ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு | 145.00 |
| 10. | GI Sheet Shed – IV-இல் உள்ள 10.25X11 = 113 சதுரடி அளவிலான திறந்தவெளிக் கடை ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு | 165.00 |

**2. தினசரி சந்தையில் ஷட்டர் அமைத்து மூடப்பட்ட நிரந்தரக் கடைகள் 1 முதல் 58 கடைக்கான நிபந்தனைகள் :**

1. தினசரி சந்தையிலுள்ள அலுவலக ஷட்டர் அமைத்து மூடப்பட்ட கடைகள் உரிமம் பெற்றவரே நடத்த வேண்டும். உள்குத்தகைக்கு விடக்கூடாது. மீறினால் முன்னறிவிப்பின்றி உரிமம் இரத்து செய்யப்படும்.
2. தற்போது நடைமுறையிலுள்ள அரசாணையின்படி கடையின் உரிமத்தினை ஒவ்வொரு மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை வாடகைத் தொகையில் 15% உயர்வு செய்து 9 ஆண்டுகள் வரை புதுப்பித்துக் கொள்ளலாம்.
3. தற்போது நடைமுறையிலுள்ள அரசாணையில் ஏதேனும் மாற்றம் மேற்கொள்ளப்பட்டால் புதிய வழிகாட்டுதல்களின்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
4. நகராட்சியின் அனுமதியின்றி அலுவலக தினசரி மார்கெட்டில் ஷட்டர் அமைத்து மூடப்பட்ட கடைகளில் எவ்வித மாறுதலும் செய்யக் கூடாது மற்றும் கடையினை சுற்றி எவ்வித ஆக்கிரமிப்பும் செய்யக் கூடாது.
5. சட்டத்திற்கு புறம்பான வியாபாரங்கள் எதுவும் செய்யக் கூடாது.
6. வாடகையினை மாதத்தின் 10–ஆம் தேதிக்குள் செலுத்த வேண்டும். 10–ஆம் தேதிக்குப் பின்னர் செலுத்தும் வாடகைக்கு 18 சதவீதம் அபராதம் வசூலிக்கப்படும்.
7. அலுவலகத்திலிருந்து அவ்வப்போது பிறப்பிக்கப்படும் ஆணைக்கு கட்டுப்பட்டு நடந்து கொள்ள வேண்டும்.
8. ஒவ்வொரு மாதமும் செலுத்தப்படும் வாடகைத் தொகைக்கு 18 % தனியாக சேவை வரி செலுத்த வேண்டும்.
9. எளிதில் தீ பிடிக்கக்கூடிய தொழில்கள் செய்யக் கூடாது.
10. தீயணைப்பு கருவிகள் கட்டாயம் பொருத்தப்பட வேண்டும்.
11. உரிமதாரர் தன் சொந்த செலவில் ரூ. 100/– மதிப்புள்ள முத்திரைத்தாளில் நகராட்சியின் சட்டத்திட்டங்களுக்கு கட்டுப்பட்டு நடக்கிறேன் எனவும், நகராட்சிக்கு எதிராக எந்தவொரு நீதிமன்றத்திலும் வழக்கு தொடருவதில்லை எனவும் ஒப்பந்தப்பத்திரம் எழுதிக் கொடுக்க வேண்டும்.
12. உரிமதாரர் மின்சார இணைப்பிற்கு வைப்புத் தொகையாக ரூ. 10,000/–ஐ நகராட்சிக்கு செலுத்த வேண்டும். இதற்கு வட்டி ஏதும் வழங்கப்பட மாட்டாது. இத்தொகை தணிக்கை முடிந்த பின்னரே வழங்கப்படும்.
13. மின் கட்டணத்தை உரிமதாரரே மாதந்தோறும் செலுத்திக் கொள்ள வேண்டும்.

அலுவலகக்குறிப்பு :

1. கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ. 243.00 இலட்சத்தில் கட்டப்பட்டுள்ள தினசரி சந்தையில் கட்டிடம் வியாபாரிகள் சௌகரியமாக காய்கறிகள்

விற்பனை செய்யும் வகையில் மேம்படுத்தப்பட்ட முறையில் கட்டப்பட்டுள்ளது. மொத்த செலவில் நகராட்சி பங்குத் தொகை ரூ. 72.90 இலட்சம் என்பதாலும், அருகிலுள்ள நகராட்சிகளில் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள சுங்கக் கட்டணத்தினை கருத்திற்கொண்டு நிர்ணயம் செய்யபட்டுள்ளதால் மேற்படி சந்தையில் சுங்கக் கட்டணம் மற்றும் கட்டண கழிப்பிடத்தில் புதிய கட்டணம் நிர்ணயம் செய்வதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. தினசரி சந்தையிலுள்ள GI Sheet Shed - I–இல் உள்ள 8X7.75 = 62 சதுரடி அளவிலான திறந்தவெளிக் கடை ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு ரூ. 90/– வீதமும், GI Sheet Shed – II–இல் உள்ள 8.25X7.75 = 64 சதுரடி அளவிலான திறந்தவெளிக் கடை ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு ரூ. 95/– வீதமும், GI Sheet Shed – III–இல் உள்ள 9.5X10.5= 100 சதுரடி அளவிலான திறந்தவெளி கடை ஒன்றிற்கு நாள் ஒன்றுக்கு ரூ. 145/– வீதமும் மற்றும் GI Sheet Shed – IV–இல் உள்ள 10.25X11 = 113 சதுரடி அளவிலான திறந்தவெளிக் கடை ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு ரூ. 165/– வீதம் கட்டணம் நிர்ணயம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

3. தினசரி சந்தையில் புதியதாக கட்டப்பட்ட GI Sheet Shed – I முதல் IV வரையுள்ள நடைமேடை கடைகள் 1 முதல் 42 வரை ஆண்டு குத்தகையாக ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொது ஏலம் மேற்கொள்ளவும். மேலும், தினசரி சந்தையில் புதியதாக கட்டப்பட்ட ஷட்டர் வைத்து மூடப்பட்ட கடைகள் 1 முதல் 58 கடைகள் மாத வாடகை அடிப்படையில் கட்டணம் நிர்ணயம் செய்து ஏலம் விடுவதற்கும், வைப்புத் தொகை நிர்ணயம் செய்வதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

4. இதற்கான செலவினங்களை பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(2023/22/எ2)

**தீர்மானம் எண். 518**

அனுமதிக்கப்பட்டது

**(29)** இராசிபுரம் நகராட்சியில் உள்ள வார்டு எண். 1 முதல் 27 வரை உள்ள பகுதிகளில் உள்ள ஆழ்துளை கிணற்றில் உள்ள மின் மோட்டார்கள் மற்றும் திறந்தவெளி கிணறுகளில் உள்ள மின் மோட்டார்கள் அடிக்கடி பழுதடைவதால் பொதுமக்கள் நலன் கருதி மின் மோட்டாரில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்ய வேண்டியுள்ளது. எனவே மேற்படி பணிகள் மேற்கொள்ள உத்தேச செலவினத் தொகை ரூ.3.00 இலட்சம் (ரூபாய் மூன்று இலட்சம்) குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்

(2023/5469/இ2)

**தீர்மானம் எண். 519**

அனுமதிக்கப்பட்டது

**(30)** இராசிபுரம் நகராட்சியில் உள்ள வார்டு எண்கள். 1 முதல் 27 வரை உள்ள பகுதிகளில் குடிநீர் பகிர்மான குழாய்களில் ஏற்படும் குழாய் உடைப்புகள் மற்றும் அடைப்புகள் குடிநீர் அல்லாத பயன்பாட்டிற்காக உள்ள ஆழ்துளை கிணற்றில் இருந்து செல்லும் உப்பு நீர் குழாய்களில் ஏற்படும் உடைப்புகள் மற்றும் உதிரி பாகங்கள் மாற்றி பணிகள் செய்ய வேண்டியுள்ளது. மேலும் மேற்கண்ட பணிகளை பொது மக்கள் நலன் கருதி உடனுக்குடன் சரி செய்ய ஆகும் உத்தேச செலவினம் தொகை ரூ. 5.00 இலட்சம் (ரூபாய் ஐந்து இலட்சம்) குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

(2023/5470/இ2)

**தீர்மானம் எண். 520**

அனுமதிக்கப்பட்டது

**(31)** இராசிபுரம் நகராட்சியில் உள்ள வார்டு எண். 23 ஆர்.எம்.சி. காலனி பகுதியில் உள்ள அங்கன்வாடி கட்டிடம் மிகவும் பழுதடைந்துள்ளது. இதனால் பொதுமக்களுக்கு மிகுந்த இடையூறாக உள்ளது. எனவே அதனை இடித்து அப்புறப்படுத்த மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

(2023/5471/இ2)

**தீர்மானம் எண். 521**

அனுமதிக்கப்பட்டது

ஒம்/– முனைவர் இரா. கவிதா சங்கர்,
நகர் மன்றத் தலைவர்.

/ உண்மை நகல் /

ஆணையாளர்
இராசிபுரம் நகராட்சி.